அனுப்புநர்

டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப.,
பேரூராட்சிகள் ஆணையர்
குறளகம், சென்னை 600 108

பெறுநர்

பேரூராட்சி மன்றத் தலைவர்கள்

ந.க.எண். 17133/2007 இ 3 நாள் 27.8.2008

அய்யா/அம்மையீர்,

பொருள்– பேரூராட்சிகள் நிர்வாகம் – தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் சட்டப்படியான அதிகாரங்களை அவர்களின் உறவினர்கள் செயல்படுத்துதல் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை– 1) இவ்வாணையராக சுற்றறிக்கை எண் ந.க. 17133/2007 இ 3 நாள் 17.9.2007.

2) இவ்வாணையராக கடிதம் ந.க. 17133/2007 இ 3 நாள் 22.08.2008.

3) இவ்வாணையராக கடிதம் ந.க. 19112/2007 இ 2 நாள் 26.08.2008.

பேரூராட்சி மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான தலைவர், துணைத் தலைவர். உறுப்பினர்கள் ஆகியோர் தங்களுக்குரிய கடமைகள் / பொறுப்புகள் உணர்ந்து செயல்படுவது தொடர்பாக பார்வையில் காணும் இவ்வாணையாக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதேப்போன்று பெண் தலைவர் அவர்களே நிர்வாத்தில் இடம்பெறவேண்டும் என்றும் மற்றவர்கள் யாரும் தலையிடக் கூடாது எனவும் பார்வை 2ல் காணும் கடித்த்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக பேரூராட்சிகளின் தலைவர்கள் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர் , சிக்கலின்றி திறம்பட மன்றத்தினை நடத்தி வருகின்றனர். பல துறைகளை ஒருங்கிணைத்து பொது மக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பேரூராட்சிகள் ஆணையர் அவர்களை சந்தித்து பல்வேறு நிதி ஒதுக்கீடு / அனுமதி ஆணையைப் பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். சில தலைவர்கள் தமது பேரூராட்சிப் பகுதியிலுள்ள ஒவ்வொரு தெருக்களுக்கும் சென்று நேரம் காலம் பாராமல் மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்வதோடு மட்டும் அல்லாமல், அங்கு ஏற்படும் பிரச்சனைகளை துரிதமாக தீர்த்து வைக்ககின்றனர், பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் இத்தகைய தலைவர்களின் சிறந்த நிர்வாக திறமையை மாவட்ட ஆட்சித்தலைவர்கள்/ பேரூராட்சிகள் ஆணையர் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர். சில தலைவர்கள் அவர்களது அதிகாரம் தமது உறவினர்களுக்கு ஒப்படை செய்யாமல் அல்லது ஒப்படைக்காமலும் அல்லது உறவினர்கள் தமது அதிகாரத்தில் தலையீடு செய்வதை அனுமதிக்கப்படாமலும், தாங்களே கடமையுணர்வுடன் தலைவர்களுக்கு உண்டான பணிகளை திறம்பட நிர்வகித்து வருகின்றனர்.

ஆயினும் ஒரு சில பேரூராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர்கள் அப்பேரூராட்சியின் துணைத் தலைவர் அல்லது தலைவரின் உறவினர்கள் உள்ளூர் பிரமுகர்கள் போன்றோர் பேரூராட்சி மன்றத்தில் தலைவரின் இருக்கையில் அமர்ந்து தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை நேரடியாக செயல்படுத்துவதற்கான அறிவுரைகள் வழங்குவது, பேரூராட்சி மன்றத்தின் செயல் அலுவலர், பணியாளர்கள், மன்ற உறுப்பினர்கள் அவர்களை ஒரு குறிப்பிட பணிகளை / காரியங்களை செய்வதற்கு வலியுறுத்துவது / வற்புறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகவும் இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு வந்துள்ளன. மேலும், தலைவருக்கு பொது மக்கள் அல்லது அலுவலர்களால் ஒரு குறிப்பிட்ட விவரங்களுக்கு தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் போது தலைவர் சார்பாக அவரது உறவினர்கள் அவற்றிற்கான பதில் அளிப்பது அல்லது அறிவுரைகள் வழங்குவது, பேரூராட்சி அலுவலகத்திலேயே

இருந்து கொண்டு அங்கு நடைபெறும் சட்டப்படியான பணிகளுக்கு குந்தகம் விளைவிப்பது, துப்புரவு பணியாளர், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் குடிநீர் பராமரிப்பு பணியாளர்களுக்கு குறிப்பிட்ட பணிகளை செய்வதற்கான அறிவுரைகளை வழங்குவது போன்றவற்றை செய்து வருவதாக தெரியவந்துள்ளது.

தலைவர் அவரது உறவினர்கள் துணைத் தலைவர் அல்லது முக்கிய பிரமுகர்கள் ஆக பலர் தலைவரின் அதிகாரங்களை செயல்படுத்துவதால், யார் உண்மையான தலைவர் என்ற குழப்பமான சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் உண்மையான தலைவரின் அதிகாரம் பறிபோய் விடுகிறது. மேலும் தலைவரின் பொறுப்பில் உள்ளவர்கள் அவர்களுடைய அதிகாரத்தை செயல்படுத்தாமல் இருப்பதால் நிர்வாக சிக்கல்கள் ஏற்பட காரணம் அகிறார்கள்.

சில இடங்களில் தலைவர்கள் சட்டப்படியான நிர்வாகம் குறித்து தெரியாதவர்களாக இருப்பதால் , துணைத் தலைவர் அல்லது தலைவரின் உறவினர்கள் நிர்வாகத்தில் தலையிடுகின்றனர். உதாரணமாக தலைவர்கள் சார்பாக மாவட்ட ஆட்சியர் அல்லது பேரூராட்சிகளின் ஆணையர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது அல்லது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தும் பொழுது துணைத் தலைவர் அல்லது தலைவரின் உறவினர்கள் பங்கேற்று விளக்கம் அளப்பது, பேரூராட்சி பணியாளர்களுக் அறிவுரைகள் வழங்குவது அறிவுரைகள் வழங்குவது, மதிப்பீடுகள் தயாரிக்க பொறியாளருக் அறிவுரை வழங்குவது செயல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குவது தினசரி நிர்வாகத்தில் தலையிடுவது போன்றவற்றை செய்து, அவர்கள் தாங்கள் தலைவருக்கு மேலாக கூடுதல் அதிகாரம் படைத்தவர்களாக (Extra Constitutional Authority) செயல்பட்டு வருவதும் தெரிய வருகிறது. இந்நிலை கண்டிக்கத்தக்கதாகும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை தவிர வேறு எவரும் நிர்வாகத்தில் தலையிட அனுமதிக்கப்பட மாட்டாது. தலைவர் இல்லாத நேரங்களில் துணைத் தலைவர் தலைவராக செயல்பட வேண்டும் இதர சாதாரண சூழ்நிலைகளில் தலைவர் மட்டுமே முழு அதிகாரம் பெற்றவராக செயல்பட வேண்டும். விதிகள் நடைமுறைகள் குறித்து விவரம் தெரியாத தலைவர்கள் இருப்பின் செயல் அலுவலர் அத்தகைய தலைவர்களுக்கு சட்டம் மற்றும் விதிகள் குறித்த தெளிவாக அவர்களுக் வழிகாட்ட வேண்டும். அவசியமானால் அவர்களுக்கு நிர்வாக திறனறிவு குறித்து உதவி இயக்குநரால் பயிற்சி வழங்கப்படும். எந்தவொரு பேரூராட்சியிலும் தலைவரின் சார்பாக துணைத்தலைவர், தலைவரின் உறவினர்கள் அல்லது முக்கிய பிரமுகர்கள் எவரேனும் நிர்வாகத்தில் தலையிட்டால் அத்தகைய நிகழ்வுகள் குறித்து செயல் அலுவலர் பதிவு செய்து, மந்தண கடிதங்கள் மூலம் உதவி இயக்குநர்/மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையருக்கு உடனுக்குடன் அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

இது தொடர்ந்து நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும். இதுபோன்று தவறான நடைமுறைகள் மீண்டும் நபெறுவதற்கு வாய்ப்புகள் கொடுக்கக் கூடாது. இந்நிகழ்வுகள் தொடருமானால் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அவர்கள் சட்டப்படியாக வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு தடை செய்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான நிகழ்வுகளை தடை செய்யாவிடில் அதனை ஊக்கப்படுத்துவதாக கருதி செயல் அலுவலர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே தேர்தெடுக்கப்பட்ட பெண் தலைவர்கள் செயல்படுவது தொடர்பாக இவ்வணையரகத்தின் மூலம் பார்வை 2ல் காணும் கடிதத்தின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் செயல்பாடுகள் குறித்தும், விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வறிவுரைகளை பின்பற்றி தலைவர்கள் சிறப்பாக செயல்படுவதன் மூலம் சிறந்த நிர்வாகத்தை செய்து, பொது மக்களுக்கு சேவை செய்திட வேண்டுமென இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

அனைத்து பேரூராட்சி மன்றத் தலைவர்கள்
நகல் அனைத்து பேருராட்சி செயல் அலுவலர்கள்
நகல்–
பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள் (அனைத்து)
இ3 பிரிவு உதவியாளர்